# DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:56/2021 Deposition of Witness for : P.W. 15**

| | | | |
|---|---|---|---|
| Name | : வெங்கடேஸ்வரன் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |
| Village | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 22-10-2025

**முதல் விசாரணை**

நான் தற்போது கோவை வட்டார அறிவியல் ஆய்வகத்தில் தடய அலுவலராக பணியாற்றி வருகிறேன் கடந்த 19.11.2018 அன்று நீதித்துறை நடுவர் தாராபுரம் அவர்களின் கடிதம 1168/ 18 நாள் 9.11.2018 என்ற கடிதத்தை பெற்றுக் கொண்டேன். மேற்படி கடிதத்துடன் மூலனூர் காவல் நிலைய குற்ற எண் 287/2018 என்ற வழக்கில் சம்பந்தப்பட்ட பின்வரும் 11 வழக்குச் சொத்துகளும் நீதிமன்ற கடிதம் காவலர் திரு.நீலமேகம் என்பவர் மூலமாக நான் பெற்றுக் கொண்டேன். மேற்படி 11 வழக்கு சொத்துக்கள் பின்வருமாறு.

1. அடர் பழுப்பு நிற கறையுடன் கூடிய இழை, தலையுடன் கூடிய மண் சிறிதளவு

2. அடர் பழுப்பு நிற கரையுடன் கூடிய நீளம் மஞ்சள் மற்றும் வெள்ளை நிறங்களில் கோடு போட்ட முழுக்கை சட்டை ஒன்று

3. அடர் பழுப்பு நிற கரையுடன் கூடிய கருப்பு நிற பேண்ட் ஒன்று

4. வெட்டப்பட்ட கருப்பு நிற பெர்முடாஸ் ஒன்று,

5. கிழிந்த சிகப்பு நிற ஷார்ட்ஸ் ஒன்று

6. பழுப்பு நிற கரையுடன்கூடிய 2.5 கிலோ எடை கொண்ட கல் ஒன்று

7. சந்தன நிற டிசைன் போட்ட அரைக்கை சட்டை ஒன்று

8. கருப்பு நிற பேண்ட் ஒன்று

9.மஞ்சள் மற்றும் சாம்பல் நிற டிசைன் போட்ட சிகப்பு மற்றும் பச்சை நிற சேலை ஒன்று

10. சிவப்பு நீளம் வெள்ளை மற்றும் மஞ்சள் நிற டிசைன் போட்ட பிளவுஸ் ஒன்று

11. அடர் பழுப்பு நிற கறை உடன் கூடிய வெட்டப்பட்ட சிவப்பு பார்டர் போட்ட கருப்பு நிற பனியன் ஒன்று

மேற்குறிப்பிட்ட 11 வழக்கு சொத்துக்களையும் நான் ஆய்வுக்கு உட்படுத்தினேன். மேற்படி ஆய்வில் அயிட்டங்கள் 1, 2, 3, 6, 11 ஆகியவைகளில் இருந்த கறைகள் ரத்தம் என கண்டறிந்தேன். இதர அயிட்டமான 4, 5, 7, 8, 9, 10 ஆகியவற்றில் ரத்தக்கறை எதுவும் இல்லை. கண்டறியப்பட்ட ஆய்வின் முடிவினை ஆய்வு அறிக்கையாக தயாரித்து 27.12.2018 ம் தேதியிட்ட உயிரியல் அறிக்கையினை நீதித்துறை நடுவர் தாராபுரம் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். மேலும் கண்டறியப்பட்ட ரத்தக்கறைகளின் ரத்த இனம் மற்றும் ரத்த வகை கண்டறியும் பொருட்டு அவற்றை நான் குருதி வடிநீரியல் ஆய்வுக்கு உட்படுத்தினேன். அந்த ஆய்வில் அயிட்டம் 1,2,3,6 மற்றும் 11 இல் உள்ள ரத்தக்கறையானது. "O" வகையைச் சார்ந்த மனித ரத்தம் என்று ஆய்வறிக்கை தயார் செய்து. அவை 23.01.2019 ஆம் தேதி நீதித்துறை நடுவர் தாராபுரம் அவர்கள் அனுப்பி வைத்தேன். மேலும் இவ்வழக்கு தொடர்பாக 19.11.2018 அன்று இந்த வழக்கில் இறந்து போன 35 முதல் 40 வயது கொண்ட அடையாளம் தெரியாத ஆண் பிணம் பிணக்கூராய்வு செய்யப்பட்டபோது சேகரித்து அனுப்பி வைக்கப்பட்ட மாதிரி ரத்தக் கறையினை நான் பெற்றுக் கொண்டேன். அந்த ரத்தக்கறையினை ஆய்வு செய்தபோது அது "O" வகையைச் சார்ந்தது என்று கண்டறிந்து, அதற்கான அறிக்கையை நான் தயார் செய்து மேற்படி அறிக்கையினை பேராசிரியர் மற்றும் சட்டம் சார்ந்த மருத்துவம் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். நீதித்துறை நடுவர் அனுப்பிய கடிதத்தின் அசல் **அ.சா.ஆ.15** ஆகும். உயிரியல் அறிக்கை **அ.சா.ஆ.16** ஆகும். செராலஜி அறிக்கை **அ.சா.ஆ.17** ஆகும்.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

உங்களிடம் அனுப்பப்பட்ட இரத்த மாதிரி R.H பிரிவு என்ன என்பது குறித்து, நான் வழங்கிய அறிக்கையில். குறிப்பிட்டுள்ளேனா என்றால்

**பதில்–** இல்லை.

அவ்வாறு குறிப்பிடாததற்காக காரணம் என்ன என்றால்

**பதில்–** அதற்கான ஆய்வு ஆய்வகத்தில் மேற்கொள்ளப்படவில்லை.

அவ்வாறு ஆய்வு மேற்கொள்ளாததற்கான குறிப்பிட்ட காரணம் என்ன என்றால்

**பதில்–** இரத்தம் மாதிரியும் R.H பிரிவை அறுதியிட்டு கூற முடியாது என்பதால், என்னுடைய அறிக்கையில் அதை நான் குறிப்பிடவில்லை. மேலும், எங்களுடைய ஆய்வகத்தில் அதற்கான வசதி இல்லை. இது தொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

ஹைதராபாத் மற்றும் பூனேவிலுள்ள அறிவியல் ஆய்வகத்தில் ரத்த மாதிரிகளில் R.H பிரிவை கண்டறிவதற்கான வசதிகள் உண்டு என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. என்னிடம் அனுப்பப்பட்ட ரத்த வகைகளின் R.H பிரிவு குறித்து நான் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான் இறந்து போனவரின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட ரத்த மாதிரியின் R.H பிரிவையும் நான் என்னுடைய அறிக்கையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். உடலில் இருந்து எடுக்கப்பட்ட ரத்த மாதிரியின் R.H பிரிவையும் நான் என்னுடைய அறிக்கையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

**2ம் எதிரி மேற்கண்ட குறுக்கு விசாரணையை தன்னுடையதாக ஏற்றுக் கொண்டார்.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.24 18:58:00 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.